**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 193/2024 |
| Deposition of Witness | : | PW- 5 |
| Name | : | ஜெகநாதன் |
| Father Name | : | கன்னியப்பன் |
| Village | : | பழையகோட்டை |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 45 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20.07.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது பழையகோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் டெக்கரேசன் மற்றும் கேட்டரிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 29.04.2024 ஆம் தேதியன்று மாலை 4 – 5 மணியளவில் ஈ.பி.இ.டி காலேஜ் அருகே வந்து கொண்டிருந்தபோது, போலீசார் விபத்து நடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் சக்திவேல் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

நான் காவல் நிலையத்தில் வைத்து வெள்ளைத் தாளில் கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.20 11:03:53 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்